முருகப்பெருமான் துணை

**மகான் வராகிமிகி அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**21.01.2023**, சனிக்கிழமை

1. ஞானத்தலைவனாக கலியினில்
ஞானிகள் பூசைதனை செய்து
தான தருமமும் செய்து கொண்டு
தரணி காத்திடும் அரங்கனே
2. அரங்கனே உன்பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது கலை திங்கள்
வரங்களென சப்தம திகதி காரிவாரம்
(சுபகிருது வருடம் தை மாதம் 07 ம் நாள் 21.01.2023, சனிக்கிழமை)
வழங்குவேன் அனுகூல ஆசிதனை
3. ஆசிதனை வராகிமிகி யானும்
அருளுவேன் உலகோர் நலம்பெற
வாசிவென்ற ஞானிகள் படை
வலம்வந்து காத்து அருளிவர
4. வருகவே அரங்கன் குடில் நோக்கி
வல்லமை வேண்டி உலகமக்கள்
முருகா என வணங்கி வருக
முழுமை ஞானம் வரும் மக்கள் அடைவர்
5. அடையவே சரணாகதி பெருக
அனைவருக்கும் பிறவாய் பேறு
தடையற ஞானிகள் ஆசியால் கிட்டி
தரணியை மாற்றும் பலம் அடைவர்
6. அடையவே அரங்கமகா ஞானியரின்
அருளுபதேசம் அன்னதான நெறி
தடையற உலகோரும் ஏற்றுமே
தரணியெங்கிலும் பரவச் செய்து
7. செய்துமே சர்வபலமும் ஆகவே
செப்பிட சேவைதனை ஆற்றிட
மெய்ஞான வாழ்வாக மாறியே
மேலவர்கள் ஆசியும் வெளிப்பாடும் உருவாகி
8. ஆகியே கலியுகம் தன்னில்
அநீதிகள் அவலங்கள் அனைத்தும்
ஏகியே புலனறியாதபடி அழிந்து
இனிவரும் காலம் அமைதி பாதுகாப்பு
9. பாதுகாப்புடன் செயல்கள்சிறந்து
பண்பான உயர் நடத்தைகளாகி
பூதலம் எங்கிலும் மாற்றம்
புண்ணிய வழிகளில் நடந்து

10. நடந்துமே ஞானவான்கள் படைபெருக
ஞானத் தலைமைகளாக உருவாகி
இடரின்றி ஞானிகள் ஆட்சியும்
இந்த உலகையே மாற்றும் ஞான ஆட்சியும்

11. ஆட்சியும் அரங்கேறி இனிதே
அறிவிப்பேன் கலியின் காலம்
மாட்சிமைமிக்க ஞானசித்தர் காலமாக
மண்ணுலகம் அடைதல் காணும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–